கல்குடா கல்வி வலய, பாடசாலைகளின் சுய கற்றல் செயற்பாட்டு பரீட்சைக் குழு
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை-புதிய பாடத்திட்டம் 2020

| தமிழ் 1 (மாதிரி வினாத்தாள்:01) Tamil I | 72 | T | I | மூன்று மணித்தியாலம் மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம் |
|---|---|---|---|---|

அறிவுறுத்தல்கள்: பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும், எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

01. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**(i)** **வாரலெம் சேரி தாரனின் றாரே**
**அலரா கின்றாற் பெரும காவிரிப்**
**பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த**
**ஏந்துகோட் டியானைச் சேந்தன் தந்தை**
**அரியலம் புகவி னந்தோட்டு வேட்டை**
**நிரைய ஒள்வாள் இளைஞர் பெருமகன்**
**அழிசி ஆர்க்கா டன்ன விவள்**
**பழிதீர் மாணலந் தொலைதல் கண்டே.**

(அ) இப்பாடல் இடம்பெறும் துறையை விளக்குக.
(ஆ) இப்பாடலில் இடம் பெறும் உள்ளுறை உவமத்தை எடுத்துக்காட்டுக.
(இ) இப்பாடலூடாக தோழி, தலைவனுக்கு உரைக்கும் செய்திகள் யாவை?

**(ii)** **'எலியெலாம் மிப்படை யரவம் யானென**
**வொலியுலாஞ் சேனையை யுவந்து கூவினான்**
**வலியுலா முலகினில் வாழும் வள்ளுகிர்ப்**
**புலியெலா மொருவழிப் புகுந்த போலவே.**

(அ) இப்பாடல் இடம்பெறும் சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.
(ஆ) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அணியினை எடுத்துக்காட்டுக.
(இ) **'எலி எலாம் இப் படை அரவம், யான்'** என எனும் தொடர் மூலமாக கம்பன் உணர்த்த விளைவது யாது?

**(24 புள்ளிகள்)**

**02.** பின்வரும் (அ)கவிதையை **அல்லது** (ஆ) உரைப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.
**(அ)பின்வரும் கவிதையை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

காயு ருட்ட லானார் - சூதுக்
களிதொ டங்க லானார்
மாய முள்ள சகுனி - பின்னும்
வார்த்தை சொல்லு கின்றான்;
''நீய ழித்த தெல்லாம் - பின்னும்
நின்னி டத்து மீளும்,
ஓய்வ டைந்தி டாதே, - தருமா!
ஊக்க மெய்து'' கென்றான்.
கோயிற் பூசை செய்வோர் - சிலையைக்
கொண்டு விற்றல் போலும்,



kalvi.lk

வாயில் காத்து நிற்போன் - வீட்டை
வைத்தி ழுத்தல் போலும்,
ஆயி ரங்க ளான - நீதி
யவையு ணர்ந்த தருமன்
தேயம் வைத்தி ழுந்தான்; - சீச்சீ
சிறியர் செய்கை செய்தான்.

'நாட்டு மாந்த ரெல்லாம் - தம்போல்
நரர்க ளென்று கருதார்;
ஆட்டு மந்தை யாமென் - றுலகை
அரச ரெண்ணி விட்டார்.
காட்டு முண்மை நூல்கள் - பலதாங்
காட்டி னார்க ளேனும்
நாட்டு ராஜ நீதி - மனிதர்
நன்கு செய்ய வில்லை.

ஓரஞ் செய்தி டாமே, - தருமத்
துறுதி கொன்றி டாமே,
சோரஞ் டிசய்திடாமே, - பிறரைத்
துயரில் வீழ்த்தி டாமே,
ஊரை யாளு முறைமை - உலகில்
ஓர்பு றத்து மில்லை.
சார மற்ற வார்த்தை! - மேலே
சரிதை சொல்லு கின்றோம்.

(i) இக்கவிதை வலியுறுத்தும் அவா,ஆதங்கம் என்பவற்றை எடுத்துக்காட்டுக.

(ii) சூதின் இழிவுகளாக கவிஞர் கூறுவனவற்றைக் குறிப்பிட்டு, அந்நிலையினை தருமன் அடைந்தவாற்றை எடுத்துக்காட்டுக.

(iii) சிறந்த ஆட்சித்தலைவனுடைய இலட்சணங்களாக கவிதையில் வலியுறுத்தப்படுவன யாவை?

(iv) தருமனின் செயலைப்பற்றியும் சகுனியின் வஞ்சனைபற்றியும் பாரதி கூறுமாற்றை எடுத்துக்காட்டுக.

**(16 புள்ளிகள்)**

**(ஆ) பகுதியிலுள்ள உரைப் பகுதியைப் படித்து அதன்கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

அறுபது ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்துவிட்டார். கடிகாரத்தைப் பார்க்காது, கடிகாரத்தின் விநாடி முள்ளைப் பார்க்கிலும் நுணுக்கமான நேரக் கணக்கில் இயங்குவது அவருடைய இரத்தத்திலேயே ஊறியிருக்கின்றது. கொல்லையிலே கழிவுக் கருமத்தைமுடித்து, அடிக்கழுவி, கிணற்றடிக் கமுக மரத்திலே தொங்கும் குரும்பைப் பாதியிற்கிடக்கும் உமிக்கரியினாற் பற்களைச் சுத்தஞ் செய்து, திண்ணைக்கு மீளுவார். 'இறப்பில்' தொங்கும் வெண்சங்கிலே கதிர்காமத்து விபூதி இருக்கும். வலது கை விரல்களுக்குள் எடுத்து, "சிவ... சிவா...." என்று உச்சரிக்கும்பொழுது, நல்லூர்க் கந்தனின் உதயகாலப் பூசைமணி கேட்கும்.

இன்றும் "சிவ... சிவா.." என்று விபூதி பூசும்பொழுது, உதயகாலப் பூசை மணி கேட்கின்றது. கால ஓட்டத்திலே தரிக்காது நடைபெறும் நித்திய கருமங்கள்.

"இன்று வருடப்பிறப்பு...." – முதன் முதலில் இந்த எண்ணந்தான் முகத்தாருக்கு ஏற்படுகின்றது. எத்தனையோ வருடப்பிறப்புகள் வந்து போய்விட்டன. அவற்றுடன் எத்தனையோ வருடங்களும் ஓடி மறைந்துவிட்டன. பார்வதிப்பிள்ளையைக் கல்யாணஞ் செய்த முதல் வருடம் வந்த வருடப்பிறப்பு:



kalvi.lk

இராமேசுவர நேர்த்திக்கடனுக்குப் பிறகு சுப்பிரமணியனைப் பெற்று, முருகண்டியிலே மயிர்நீக்கக் கடன்செய்த மறுநாள் வந்த வருடப்பிறப்பு: சௌந்தரம் கல்யாணமாகி, மருமகனுடன் வந்த வருடப்பிறப்பு: தகப்பனுக்குத் தலைக்கொள்ளி வைத்து, கோடி கட்டாதே கழிந்த வருடப்பிறப்பு: பார்வதிப்பிள்ளை போய், நாளே காடாகிக் கிடந்த வருடப்பிறப்பு: - இப்படிப்பல. கால ஓட்டம் அவர்தம் உழைப்பை விழுங்கி, உடலைச் சருகாக்கி விட்டது.

முன்னர் போல சுறுசுறுப்பில்லை. நல்லெண்ணெயில் வெதுப்பிய கத்தரிக்காயுடன் மூன்று நீற்றுப்பெட்டி பிட்டுச் சாப்பிட்டும், நாலு மரவள்ளிக் கிழங்கைச் சுட்டுப் பச்சைமிளகாய் சகிதம் போட்டுக் கொண்டாற்றான் காலைப்பசி அடங்கும் என்பது இளைஞப் பருவ நினைவுகள். பிள்ளைகளைப் படிக்க வைத்து உத்தியோகக்காரராக்கியதனால் இரண்டு பாண் துண்டுகளைக் 'கொறி'க்கும் பழக்கம் முகத்தார் வீட்டிலும் பரவிவிட்டது.படுத்த படுக்கையாக வைக்கும் படியாக உடம்பிற்கு அப்படியொன்றுமில்லை. முதுமை உணர்வு வலுக்கின்றது. சிறிது வாதக்குணம் போன்ற எண்ணமும் மேலிடுகின்றது. திடீரெனக் குந்தி எழும்பச் சிரமப்படுகின்றார். இதனைப் பிள்ளைகள் அறிந்துகொள்ளாத வகையில் நடந்துகொள்ளுகின்றார். கடைக்குட்டி மகளைப் பற்றித்தான் கொஞ்சம் கவலை.

திண்ணையிற் குந்தி, கப்புடன் சாய்ந்துகொள்கின்றார்.

அவள் பொடிச்சிதான் பாவம். தாயத்தின்னியாப் போயிட்டுது. படிப்பை முடிச்சுப் போட்டு, மூலையிலே கிடந்து பெருமூச்சு விடுகுது. அவளை மேலை படிக்க வைக்கலாமெண்டு மூத்ததுகள் விரும்பினதுதான். வேணுமெண்டால், உதுகளின்ரை பொம்பிளைப்பிள்ளையள் படிச்சு உத்தியோகம் பாக்கட்டும். இளையவனின்ரை பாடு பிழையில்லை. ஒரு மாதிரி ஒரு வேலையிலை கொழுவீட்டான். ஏதோ கொம்பினியிலை தான்வேலையாம். ஆனா, சம்பளம் புழையில்லை. மேலுக்கு நல்லா வரலாமெண்டு மூத்தவனும் மச்சான்மாரும் சொன்னாங்கள். அவன் கடைக்குட்டி எண்டு வீட்டோடை இருந்து சாப்பிட்டுப் பழகியவன். மூண்டு நாலு மாசம் அதுவுமில்லை. கயிற்றப்பட்டு வாழ்ந்தால்தானே, பேந்து பின்னடிக்குத் தங்கடை பாடுகளைத் தாங்களே பாக்குங்கள். நல்லூரான்ரை புண்ணியத்திலை எல்லாம் தங்கடை சீவியப்பாடுகளைப் பாக்கக்கூடியநிலைக்கு வந்துட்டுதுகள். என்ரை கெட்டித்தனம் என்ன இருக்கு? ஆண்டவன் அளந்தபடி நடக்குது... விடியப்புறக் கோச்சியிலே மூத்தவன் வருவான். அவன் மறந்தாலும் அலுத்தாலும் அவன்ரை மனுஷி கமலா இஞ்சை வராமலிருக்காள். என்னெட்டைக் கைவியளம் வாங்கிறதிலை அவளுக்கு அவ்வளவு நம்பிக்கை... ஓம்... அதுகளின்ரை மூத்ததுக்கும் - உந்தப் புது நாணயப் பேர் சட்டெண்டு மனசிலை வாறேல்லை... அவள்தான் அம்சதொனிக்குப் பத்து வயசுக்கு மேலை இருக்க வேணும்... என்ன பத்து? பதினொண்டுக்கு மேலை. கடுக்கண்ணுற பருவம்... ஓ, இவ போயே நேற்றெண்டாப் போலை இருக்குது... ஆனா, வருசம் அஞ்சாகுது. அவள் புண்ணியஞ் செய்தவள். எல்லாப் பாரத்தையும் என்ரை தலையிலை சுமத்திப் போட்டுப் போயிட்டாள்.

(i) இக்கதைப்பகுதியில் குறிப்பிடப்படும் முகத்தாரின் நடத்தைக்கோலங்களை எடுத்துக்காட்டுக.

(ii) இக்கதைப்பகுதியில் வெளிப்படும் பண்பாட்டு மரபுகள் யாவை?

(iii) பின்வரும் தொடர்களுக்கான பொருளை எழுதுக.

- அடிக்கழுவல்
- வெதுப்பல்
- இறப்பு
- தாயத்தின்னி

(iv) இக்கதைப்பகுதியில் ஆசிரியர் கையாண்டுள்ள மொழிநடையின் தன்மையினை எடுத்துக்காட்டுக.

**(16 புள்ளிகள்)**



kalvi.lk

03. (அ) திருக்குறள் எழுந்த காலப்பின்னணியைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(ஆ) **அறிவுடைமை** என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு, பின்வருவனவற்றை விளக்குக.

(i) அறிவின் சிறப்பும் இலக்கணமும்.

(ii) அறிவுடையாரின் இலக்கணம்.

(iii) அறிவுடையாருக்கு உண்டாகும் பயன்கள்.

**(20 புள்ளிகள்)**

04. கம்பராமாயணம் **குகப்படலத்தில்** பெருஞ் சேனையுடன் கங்கைக் கரையை வந்தடைந்த பரதனது படைகளைக் கண்டு சினங்கொண்ட குகன் தன் படைகளைத்திரட்டியது வரையுள்ளபகுதியை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.

(அ) பரதனின் பெருமைகள்.

(அ) கவி கூற்றாக வெளிப்படும் குகனின் வீரப்பெருமைகள்.

(இ) குகனது படையெழுச்சியும் அப்படைகளுக்கு அவன் கூறியவையும்.

(ஈ) சம்பவச்சித்திரிப்பில் கம்பனது உவமையாற்றல்.

**(20 புள்ளிகள்)**

05. **திருப்பாணாழ்வாரின்** ‵அமலனாதி பிரான்பதிகத்தில்,

(அ) அரங்கநாதனின் தோற்றப் பொலிவு

(ஆ) திருஅரங்கத் தலச் சிறப்பு

(இ) புராண இதிகாசச் செய்திகள்

என்பன வெளிப்படுமாற்றை எடுத்துக்காட்டுக.

**(20 புள்ளிகள்)**

06. வ.அ.இராசரெத்தினத்தின் **‘ஒரு வெண்மணற்கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது’** எனும் நாவலில்,

(அ) சலுன்கடை பரமன்

(ஆ) தாமோதரத்தின் நண்பன் பாலா

(இ) தந்தை மயில்வாகனம்

ஆகிய பாத்திரங்களின் நடத்தைக்கோலங்களை மதிப்பிடுக.

**(20 புள்ளிகள்)**

07.சுவாமி விபுலானந்தரின் **தமிழ்த்தொண்டு** என்ற கட்டுரையினை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடைதருக.

(அ) கட்டுரையில் வலியுறுத்தப்படும் பிரதான செய்தி யாது?

(ஆ) கட்டுரையாசிரியர் கையாண்டுள்ள உத்திகளைக்குறிப்பிட்டு, விளக்குக.

(இ) கட்டுரையாசிரியர், தமிழ்த்தொண்டுகளாக குறிப்பிடுவன யாவை?

(ஈ) கட்டுரையில் கையாளப்பட்டுள்ள மொழிநடையின் சிறப்பினை எடுத்துக்காட்டுக.

**(20 புள்ளிகள்)**

08. பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றினை** விளக்குக.

(அ) **மகாகவி பாரதியின் கண்ணம்மா என்காதலி** எனும் கவிதையின் பாடுபொருள்.

(ஆ) **புறநானூறு, ஒரு நாள் செல்லலம்...** எனும்பாடலில் அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடை.

(இ) **குறுந்தொகை, பூவோடு புரையுங் கண்ணும்...** பாடலில் நெய்தல் நிலவிபரிப்பும், தலைவியின் அழகு நலன்களும்.

(ஈ) **கு.அழகிரி சாமியின், தியாகம்** சிறுகதையின் பேசுபொருளும், கடை முதலாளி கதிரேசன் செட்டியாரிடத்து வெளிப்படும் மனிதநேயப்பண்புகளும்.

**(20 புள்ளிகள்)**



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page